## நூல் வெளியீடு – அருங்காட்சியகங்களுக்கு அடிக்கல்!

# கீழடி இணையதளம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, ஜன.23-**

**தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் நடத்தப்படும் "இரும்பின் தொன்மை நூல் வெளியிடுதல், கீழடி திறந்த வெளி அருங்காட்சியகம் & கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டுதல், கீழடி இணையதளத்தினைத் தொடங்கி வைத்தல்" போன்ற பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் இன்று (23.01.2025) காலை 10.30 மணியளவில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையானது, தமிழ்நாட்டில் தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களில் அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு அகழாய்வுகளின் வாயிலாக கிடைக்கப்பெற்ற தொல்பொருட்கள் இவ்விழாவில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

சிவகங்கை மாவட்டம், கீழடி அகழாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்ட சங்ககால செங்கல் கட்டுமானங்கள், உறைகிணறுகள், தொழிற்கூடப் பகுதிகள் ஆகியவற்றை பொதுமக்களும் எதிர்காலத் தலைமுறையினரும் நேரடியாகக் கண்டு உணரும் வகையில் கீழடி அகழாய்வுத் தளத்தில் திறந்தவெளி தொல்லியல் அருங்காட்சியகம் (Open Air Museum) 4.48 ஏக்கர் பரப்பளவில் ரூ.17.10 கோடி மதிப்பீட்டில் வடிவமைக்கப்பட உள்ளது. இக்கட்டுமானப் பணிகளை விரைவில் தொடங்கும் வகையில், முதலமைச்சர் அவர்களால் இவ்விழாவில் கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்ட உள்ளார்.

தமிழர்களின் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் வகையில் உள்ளூர் கட்டடக் கலைப் பாணியைப் பின்பற்றி வடிவமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகமானது, 1) வைகை மற்றும் கீழடி 2) வேளாண்மை மற்றும் நீர் மேலாண்மை 3) கலம் செய் கோ 4) ஆடையும் அணிகலனும் 5) கடல் வழி வணிகம் 6) வாழ்வும் வளமும் ஆகிய ஆறு கருப்பொருட்களின் அடிப்படையில் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

கீழடியின் தொன்மைச் சிறப்பையும் வரலாற்றுப் பெருமையையும் அறிந்து கொள்ளவும் பல்துறை அணுகுமுறையோடு அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தை நேரடியாக வந்து காண இயலாதவர்கள் தாங்கள் இருக்கும் இடத்திலிருந்தே கண்டுகளிப்பதற்காக மெய்நிகர் சுற்றுலா உருவாக்கப்பட்டு கீழடி இணையதளத்தில் இணைக்கப்பட்டுள்ளது. கீழடி அருங்காட்சியகத் திரையரங்கில் திரையிடப்படும் ஆவணப்படம் மற்றும் காட்சிக் கூடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து வகையான தரவுகள் எனக் கீழடி அருங்காட்சியகம் குறித்தான அனைத்து விவரங்களையும் இந்த மெய்நிகர் சுற்றுலாவில் கண்டு மகிழலாம். இந்த இணையதளம் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் 28.11.2022 அன்று அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் "மாமன்னர் இராஜேந்திர சோழனுக்குச் சிறப்பு சேர்க்கக்கூடிய வகையில் கடற்பயணம், கடல் வாணிகம் மற்றும் கப்பல் கட்டும் தொழில்நுட்பத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கியதையும், மேலைநாடுகளுடனும், கீழை நாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததையும் உலகிற்குப் பறைசாற்றும் வகையில் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஓர் அருங்காட்சியகம் உருவாக்கப்படும்" என அறிவித்தார்.

அரியலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள கங்கைகொண்ட சோழபுரம் முதலாம் இராஜேந்திர சோழனால் (கி.பி.1012-1044) சோழர்களின் தலைநகரமாக நிறுவப்பட்டது. இவ்வூரில் அரண்மனை அமைந்திருந்ததாகக் கூறப்படும் மாளிகைமேடு அகழாய்வுத் தளத்தில் செங்கல் கட்டுமானங்கள், கூரை ஓடுகள், இரும்புப் பொருட்கள், செம்புப் பொருட்கள், செப்புக் காசுகள், செலடன் மற்றும் போர்சலைன் வகை சீனப் பானை ஓடுகள் போன்ற பல்வேறு தொல்பொருட்கள் தொடர் அகழாய்வுகளின் வாயிலாக வெளிக்கொணரப்பட்டுள்ளன. இங்குள்ள கட்டுமான எச்சங்களும், கல்வெட்டுகள் மற்றும் செப்பேடுகளும் சோழர்களின் தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தின் அரண்மனையின் அடித்தளத்தை உறுதிப்படுத்துகின்றன. சீனப்பானை ஓடுகள் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தமிழ்நாடு சீன நாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பினை நிலைநிறுத்து கிறது.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தொடர் அகழாய்வுகளின் மூலம் பெறப்பட்ட தொல்பொருட்கள் மற்றும் மன்னர் இராஜேந்திர சோழன் அண்டை நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத்தொடர்பு ஆகியவற்றை பொதுமக்களும் எதிர்காலத் தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் கங்கை கொண்ட சோழபுரம் அருங்காட்சியகம் 2325 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.22.10 கோடி மதிப்பீட்டில் அரியலூர் மாவட்டம், கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைக்கப்பட உள்ளது. இக்கட்டுமானப் பணிகளை விரைவில் தொடங்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படவுள்ளது. மேலும், இவ்விழாவில் முதலமைச்சர் அவர்கள் 'இரும்பின் தொன்மை' என்ற நூலினை வெளியிட்டு விழாப் பேருரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு வலையொளி (youtube) மூலம் நேரலையில் (https:// www. youtube.com /live/AOQVL83zj5s? si=PFAn7U_6xyy UOySO) ஒளிபரப்பு செய்யப்படவுள்ளது.

## வாய்ப்புள்ளோர் வருகை தாரீர்! மற்றவர்கள் நேரலையில் காணீர்!

# இன்று முக்கிய அறிவிப்பொன்று வெளியாகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தகவல்!

**சென்னை, ஜன.23–**

**''இன்று முக்கிய அறிவிப்பொன்று வெளியாகிறது, வாய்ப்புள்ளோர் வருகை தாரீர்; மற்றவர்கள் நேரலையில் காணீர்!'' என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

**இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது :–**

**நிதி மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தனது சமூக வலைதளப் பதிவில் –**

"இந்தியத் துணைக் கண்ட வரலாற்றின் கண்ணோட்டத்தை மாற்றி அமைக்கும் 'இரும்பின் தொன்மை' எனும் நூலை வெளியிட்டு கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம், கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் கீழடி இணையதளத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கும் நிகழ்வு 23.01.2025 அன்று காலை 10 மணி அளவில் அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடை பெற உள்ளது. அனைவரும் வருக" –

என்று வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களின் சமூக வலைதளப் பதிவு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்

**நாளை முக்கிய அறிவிப்பொன்று வெளியாகிறது!**

**வாய்ப்புள்ளோர் வருகை தாருங்கள்! மற்றவர்கள் நேரலையில் காண வேண்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## கல்லூரி மாணவிகள் 'அப்பா' என்று அழைத்து உற்சாகம்! நெகிழ்ச்சி!

# சிவகங்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சி வரவேற்பு!

## அரசு வழங்கும் உதவிகளை எடுத்துக்கூறி நன்றி – பெருமிதம்!



சிவகங்கை, ஜன. 23 -

சிவகங்கை மாவட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 2 நாட்கள் களஆய்வு மேற்கொண்டார். இரண்டாவது நாளாக நேற்று கள ஆய்வு மேற்கொள்வதற்காக சிவகங்கை சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழி நெடுகிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. காரைக்குடியில் இருந்து சிவகங்கை செல்லும் வழியில் குன்றக்குடி பகுதியில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், தி.மு.க.வினர் பூர்ண கும்ப மரியாதை அளித்து, மலர் தூவி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை வரவேற்றனர்.

தொடர்ந்து திருப்பத்தூர் பைபாஸ், அரளிக்கோட்டை, ஒக்கூர், பெருமாள் பட்டி, சோழபுரம், மதுரை முக்கு உள்ளிட்ட பகுதி களிலும், வழிநெடுகிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அரளிக்கோட்டை பகுதியில், சிலம்பம்பயிற்சிபள்ளிமாணவர்கள் சிலம்பாட்டத்துடன் வரவேற்பு அளித்தனர்.

சோழபுரம் பகுதியில் கல்வியின் விடிவெள்ளியே என்ற பதாகைகளுடன் கல்லூரி மாணவிகள் வரவேற்றனர். அப்போது, வாகனத்தில் இருந்து இறங்கிச் சென்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மாணவியருடன் உரையாடினார்.

இதனிடையே, சிவகங்கை அரசு விழாவில் பங்கேற்க சென்றபோது வரவேற்பு அளித்த மாணவிகளை சந்தித்து கலந்துரையாடியது நெகிழ்ச்சி ஏற்ப டுத்தியதாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் சாலையின் இருபுறமும் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு நின்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை வரவேற்ற நிலையில், புதுமைப் பெண் திட்டத்தை செயல்படுத்தி மாதந்தோறும் உதவித்தொகை வழங்கி வரும் முதலமைச்சருக்கு, மனமார்ந்த நன்றிகள் என மாணவிகள் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதாகவும் மாணவிகள் நன்றி கூறினர். அப்போது, மாணவிகள் முதலமைச்சரை 'அப்பா' என அழைத்து நெகிழ்ந்தனர்.

## திருத்தணி சுப்பிரமணிய சுவாமி

# திருக்கோயிலுக்கு ரூ.55 கோடியில் மாற்று மலைப்பாதை!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – பி.கே.சேகர்பாபு – ஆவடி சா.மு.நாசர் நேரில் ஆய்வு!

*திருவள்ளூர் ஜன 23;*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி வரும் வகையிலும், போக்குவரத்து நெரிசலை குறைத்திடும் வகையிலும், மாற்று மலைப்பாதை அமைப்பது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.*

*அதனை தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள் திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.99.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள தவில் மற்றும் நாதஸ்வர இசை பயிற்சிப் பள்ளியினை திறந்து வைத்தனர். மேலும், திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு விசேஷ நாட்கள் மற்றும் அரசு விடுமுறை நாட்களில் இரயில் நிலையத்திலிருந்து மலைக்கோயிலுக்கு செல்ல ஏதுவாக இலவச பேருந்து வசதியினையும் தொடங்கி வைத்தனர்.*

**அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!**

*பின்னர், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ. வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,*

*ஆன்மிகப் பெருமக்கள் மிக மிக விரும்புகின்ற இடமாக திருத்தணி திகழ்கிறது. அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியை இசை மேதைகள் போற்றி பாடியுள்ளார்கள். ஆடிக்கிருத்திகை பெருவிழாவிற்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். திருத்தணிக்கு சென்னையிலிருந்து 1.40 கிலோமீட்டர் தொலைவிற்கு ஏற்கனவே புறவழிச்சாலை இருக்கின்றது. அந்த வழியாகத்தான் தற்போது பக்தர்கள் வருகை தருகின்றனர்.*

*இப்படிப்பட்ட சூழ்நிலையில் திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சகோதரர் பி.கே. சேகர்பாபு அவர்களும், இந்த மாவட்டத்தின் அமைச்சர் நாசர் அவர்களும், இந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சந்திரன் அவர்களும் திருத்தணி கோயிலுக்கு இந்த ஒரு வழி பாதை போதாது தமிழ் நாட்டிலிருந்து வருபவர்கள் ஏற்கனவே உள்ள பாதையை பயன்படுத்துகிறார்கள். ஆந்திராவிலிருந்து வருகைதரும் பக்தர்களுக்காக மேற்கு பகுதியில் மற்றொரு புறவழிசாலை அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்தார்கள்.*

*இந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இது தொடர்பாக சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மாற்று மலைப்பாதை அமைப்பது தொடர்பாக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு விரைவில் அமைக்கப்படும் என்று வாக்குறுதி தந்தார்கள். அதனடிப்படையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும், துறை செயலாளர் அவர்களும், நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பணிகளை மேற்கொள்ள பரிந்துரை செய்தார்கள்.*

*திருத்தணி திருக்கோயிலுக்கு மாற்று மலைப்பாதை அமைப்பது தொடர்பாக நெடுஞ்சாலைத்துறையும் கடந்த ஓராண்டு காலமாக ஆய்வினை மேற்கொண்டு சித்தூர் சாலையிலிருந்து மலைத் திருக்கோயிலுக்கு தரைப்பகுதியில் 900 மீட்டர், மலைப்பகுதியில் 1,100 மீட்டர் என 2 கிலோமீட்டர் தூரத்திற்கு சாலை அமைத்திட வேண்டும் என முடிவெடுத்தது. இதற்கு அரசு புறம்போக்கு நிலம் 0.52 ஹெக்டரும், தனியார் நிலம் 2.74 ஹெக்டரும், வனத்துறை நிலம் 2.72 ஹெக்டரும் தேவைப்படுகிறது. அதன்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிந்துரையோடு வனப்பகுதியில் நிலம் எடுக்க பணிகளை மேற்கொண்டோம். சாதாரணமாக ஒரு பகுதி இடம் எடுத்தால் அதற்கு நிகராக இரண்டு பங்கு இடத்தை ஒப்படைக்க வேண்டும். அந்த அடிப்படையில் மாற்று இடம் அடையாளம் காட்டப்பட்டு வனத்துறையில் அந்த கோப்புகள் பரிசீலனையில் உள்ளது. இந்த நில எடுப்பு பணிக்கு ரூ.1.92 கோடி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

**இந்த ஆண்டுக்குள் கட்டாயம் பாதை அமையும்!**

*இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் திருத்தணி திருக்கோயிலுக்கு நாளுக்கு நாள் கூட்டம் அதிகமாக கொண்டு இருக்கிறது. எனவே இந்த சாலையை நான்கு வழிச்சாலையாக அமைத்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்தார்கள். அதனடிப்படையில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் இந்த சாலையை அமைக்க சுமார் 55 கோடி ரூபாய் தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த தொகையை இந்து சமய அறநிலையத்துறை நெடுஞ்சாலைத்துறைக்கு டெபாசிட் செய்வதாக தெரிவித்து, பணியை உடனே தொடங்கிட கோரிக்கை வைத்துள்ளனர்.*

*வனத்துறை இடம் தொடர்பான ஒப்புதல் பெறப்பட்டவுடன் அந்த நிலத்தை கையகப்படுத்தி சாலை அமைக்கிற பணி மேற்கொள்ளப்படும். வருகின்ற பிப்ரவரி மாதம் சாலை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரும் டிசம்பர் மாதத்திற்குள் பணிகளை முடித்திட வேண்டும் என்ற கோரிக்கையோடுதான் என்னை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இங்கு அழைத்து வந்திருக்கிறார். அதனை ஏற்றுகொண்டு முதலமைச்சர் அவர்களின் மேலான அனுமதியை பெற்று வரும் டிசம்பர் மாதத்திற்குள் மாற்று மலைப்பாதை கட்டாயம் அமைய பெறும்.*

**சிறுவாபுரியில் புறவழிச்சாலை!**

*அதேபோல திருவள்ளூர் மாவட்டத்தில் சிறுவாபுரியில் இருக்கின்ற தமிழ்க் கடவுள் என்று போற்றப்படும் முருகன் திருக்கோயிலுக்கு அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வந்து செல்கின்றனர். அந்த ஊரின் நகர் பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டு சிரமமாக இருப்பதனால், அதற்கும் ஒரு புறவழிச் சாலை அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர். அதன்படி சிறுவாபுரிக்கும் நேரில் சென்று புறவழிச்சாலை அமைப்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள உள்ளோம். எங்களோடு நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் உள்ளிட்ட அலுவலர்களும் வந்திருப்பதனால் இன்றைய தினம் ஆய்வினை முடித்து அந்த புறவழிச்சாலையையும் வரும் டிசம்பர் மாதத்திற்குள் அமைப்பதற்கு அரசு முயற்சி செய்யும்.*

*திருத்தணியை சுற்றியுள்ள சாலைகள் சேதமடைந்துள்ளதாக தெரிவித்தீர்கள். இதுதொடர்பாக நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் உடனடியாக ஆய்வு செய்து ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு தொடங்கப்பட்ட பணிகளை உடனடியாக முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சாதரணமாக நெடுஞ்சாலைத்துறை பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்காவிட்டால் இரண்டு முறை விரைந்து முடிக்க அறிவுரை கொடுப்போம். அதன் பின்னரும் நிறைவு செய்யவில்லை எனில் பிளாக் லிஸ்ட் செய்வோம். இது தான் நடைமுறை ஆகும். தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைத்துறை மிக சிறப்பாக செயல்பட்டு கொண்டிருப்பதாக அனைவரும் பாராட்டுகின்றனர். சாலைகள் அமைப்பதில் அதிக கவனம் செலுத்துகிறோம். அலுவலர்கள் எவராவது மெத்தனப் போக்கில் இருந்தால் அவர்கள் மீதும் கட்டாயம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேட்டியளித்தார்.*

*இந்த ஆய்வின்போது, மாவட்ட கழக செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ். சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆயுஷ்குப்தா. இந்து சமய அறநிலையத்துறை தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, நெடுஞ்சாலைத்துறை சிறப்பு தொழில்நுட்ப வல்லுநர் சந்திரசேகரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.ராஜ்குமார், இணை ஆணையர்கள் சி.குமாரதுரை, ரமணி, நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் எம்.செல்வகுமார், கோட்டப் பொறியாளர் சிற்றரசு, திருத்தணி நெடுஞ்சாலைத்துறை கோட்ட செயற் பொறியாளர் ரகுராமன், திருத்தணி நகரக் கழகச் செயலாளர் வி.வினோத்குமார், திருத்தணி முருகன் கோவில் அறங்காவலர் குழு தலைவர் ஸ்ரீதரன், திருத்தணி முருகன் கோவில் அறங்காவலர்கள் உஷா ரவி, மோகனன், சுரேஷ் பாபு, மு.நாகன், மற்றும் மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி வரும் வகையிலும், போக்குவரத்து நெரிசலை குறைத்திடும் வகையிலும், மாற்று மலைப்பாதை அமைப்பது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.